### குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த

# பெருமாள் திருமொழி 3 - மெய்யில் வாழ்க்கையை

### (ஆழ்வார் அரங்கனுக்கு அடியாராய் உலகத்தாரோடு தாம் சேராமை)

668 * மெய்யில் வாழ்க்கையை * மெய்யெனக் கொள்ளும் * இவ்
வையம் தன்னொடும் * கூடுவதில்லை யான் **
ஐயனே! * அரங்கா! என்று அழைக்கின்றேன் *
மையல் கொண்டொழிந்தேன் * என்தன் மாலுக்கே 1

669 நூலினேர் இடையார் * திறத்தே நிற்கும் *
ஞாலம் தன்னொடும் * கூடுவதில்லை யான் **
ஆலியா அழையா * அரங்கா! என்று *
மாலெழுந்து ஒழிந்தேன் * என்தன் மாலுக்கே 2

670 மாரனார் * வரிவெஞ்சிலைக்கு ஆட்செய்யும் *
பாரினாரொடும் * கூடுவதில்லை யான் **
ஆரமார்வன் * அரங்கன் அனந்தன் * நல்
நாரணன் * நரகாந்தகன் பித்தனே 3

671 உண்டியே உடையே * உகந்தோடும் * இம்
மண்டலத்தொடும் * கூடுவதில்லை யான் **
அண்டவாணன் * அரங்கன் வன்பேய் முலை *
உண்ட வாயன் தன் * உன்மத்தன் காண்மினே 4

672 தீதில் நன்னெறி நிற்க * அல்லாது செய் *
நீதியாரொடும் * கூடுவதில்லை யான் **
ஆதி ஆயன் * அரங்கன் அந்தாமரைப் *
பேதைமா * மணவாளன் தன் பித்தனே 5

673 எம்பரத்தர் * அல்லாரொடும் கூடலன் *
உம்பர் வாழ்வை * ஒன்றாகக் கருதிலன் **
தம்பிரான் அமரர்க்கு * அரங்க நகர் *
எம்பிரானுக்கு * எழுமையும் பித்தனே 6

674 எத்திறத்திலும் * யாரொடும் கூடும் * அச்
சித்தம் தன்னைத் * தவிர்த்தனன் செங்கண்மால் **
அத்தனே! * அரங்கா! என்று அழைக்கின்றேன் *
பித்தனாய் ஒழிந்தேன் * எம்பிரானுக்கே 7

675 பேயரே * எனக்கு யாவரும் * யானும் ஓர்
பேயனே * எவர்க்கும் இது பேசி என்! **
ஆயனே! * அரங்கா! என்று அழைக்கின்றேன் *

பேயனாய் ஒழிந்தேன் * எம்பிரானுக்கே 8

676 * அங்கை ஆழி * அரங்கன் அடியிணை *
தங்கு சிந்தைத் * தனிப் பெரும் பித்தனாய் **
கொங்கர்கோன் * குலசேகரன் சொன்ன சொல் *
இங்கு வல்லவர்க்கு * ஏதம் ஒன்றில்லையே 9

**அடிவரவு:** மெய் நூல் மாரனார் உண்டி தீதில் எம்பரத்தர்
எத்திறத்திலும் பேயரே அங்கை ஊன்